# அரியலூர் நகராட்சி ஆணையர் (கூ.பொ) அவர்களது செயல்முறைகள்

## பிறப்பிப்பவர் : திரு. R. அசோக்குமார்.,

**ந.க.எண். 2241/2025/எப்1** **நாள். 24.07.2025**

பொருள் : மனை பிரிவு – அரியலூர் நகராட்சி – நகரமைப்பு பிரிவு – அரியலூர் மாவட்ட, அரியலூர் வட்டம் - அரியலூர் தெற்கு கிராமம் சர்வே எண். 455/4A, 4B, 458/7A1, 7B1, 6மற்றும் 484/4A-ல், 2.24 ஏக்கர் (9067ச.மீ) இடத்திற்கு – ம.வ/ந.ஊ.உ..இ(அ.மா) எண்.08/2025- குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டது நகராட்சி மூலம் இறுதி மனைப்பிரிவு அனுமதித்து உத்தரவு வழங்குதல்- தொடர்பாக.

பார்வை :

1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.9JFTJMKN/2025/2025/TCP, நாள்.28.05.2025.
2. இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.485 நாள்.18.07.2025.
3. திருமதி. கலைவாணி க/பெ தனராசு அவர்களின் மனைப்பிரிவு விண்ணப்பம் நாள். 09.06.2025

*****

**உத்தரவு**

பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களின் தொழில்நுட்ப உத்தரவில் அரியலூர் நகராட்சிக்குட்பட்ட அரியலூர் தெற்கு கிராமம் சர்வே எண். 455/4A , 4B, 458/7A1, 7B1, 6மற்றும் 484/4A-ல், 2.24ஏக்கர் (9067ச.மீ)அமைந்துள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ந.க.எண9JFTJMKN/2025/2025/TCP, நாள்.28.05.2025. தேதிய உத்தரவில் மனைப்பிரிவு மற்றும் வரைப்படத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (அ.மா.) எண்.08/2025 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் வரைப்படத்தின் படி சாலை மற்றும் பொது உபயோக இடங்கள் நகராட்சிக்கு நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி பொறியாளரின் 23.06.2025-ம் தேதிய குறிப்பின்படி மனைப்பிரிவில் மனைப்பிரிவு உரிமையாளரின் சொந்த பொறுப்பில், தார் சாலைகள், குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரின் சான்று பெறப்பட்டுள்ளது. தெருவிளக்கு வசதிக்காக தமிழ்நாடு மின் வாரிய மதிப்பீட்டின்படி மின் வாரிய அலுவலகத்தில் மதிப்பீட்டு தொகை ரூ.4550/- நாள். 28.04.2025-ல் செலுத்தப்பட்டுள்ளது மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக கீழ் கண்டவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

1. நகர் ஊரமைப்பு துறை உத்தரவு படி நிலப்பயன்பாடு மாற்றம் கட்டணமாக ரூ.73430/-ம் அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்து சீட்டு எண். 20250724016166, நாள். 24.07.2025)
2. கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ. 1000/- வீதம் ரூ.47000/-ம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்து சீட்டு எண். 090/01/3/25-26/00009578, நாள். 24.07.2025)

3. சாலை பராமரிப்புக்காக திரும்ப செலுத்தக்கூடிய முன் வைப்புத் தொகை ரூ.2.24 இலட்சம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்து சீட்டு எண். 090/01/3/25-26/00009583, நாள். 24.07.2025)

எனவே, பார்வை 2-ல் கண்ட இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானத்தில் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. எனவே, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையர்(கூ.பொ),
அரியலூர் நகராட்சி.

இணைப்பு:-

1. மனைப்பிரிவு வரைப்படம் -1
2. மனைப்பிரிவு நிபந்தனைகள் -1

பெறுதல் :

திருமதி. கலைவாணி க/பெ தனராசு,
கதவு எண்.32B2F3, மேல அக்ரஹாரம் தெரு,
அரியலூர்.